குளித்தலை நகராட்சி

2024ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 27.ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு குளித்தலை நகராட்சி நகர்மன்ற கூடத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி முடிவுசெய்ய நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் தாங்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்- 01. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.நா.நந்தகுமார் அவர்களின் மார்ச்-2024 முதல் ஜுன்-2024 வரையிலான மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்- 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் திரு.க.கார்த்திக் அவர்களின் மார்ச்-2024 முதல் ஜுன்-2024 வரையிலான மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்- 03. குளித்தலை நகராட்சி 22.05.1998-ஆம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்.85-இன்படி, 22.05.1998 ஆம் நாள் முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் பரப்பளவு 11.16சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்நகரின் மக்கள் தொகை 27910 ஆகும். தற்போது, ஆண்டு மத்திய மக்கள் தொகை (Mid Year Population) 30050 ஆகும். 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் வார்டுகள் பிரிக்கப்பட்டதில். இந்நகராட்சி 24 வார்டுகள் கொண்ட இரண்டாம்நிலை நகராட்சியாக செயல்படுகிறது

தமிழக அரசின் அரசாணை எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.எ.வி(2)) துறை, நாள்.30.08.2019-இன்படி, ரூ.06.00 கோடிக்கு மேல் ரூ.09.00 கோடிக்குள் வருவாய் உள்ள நகராட்சியை முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்திட அரசு ஆணையிடப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கான இந்நகராட்சியின் வரவு விவரம் கீழ்க்காணும்படி உள்ளது

| தொகை (ரூ.கோடியில்) | 2021-2022 | 2022-2023 | 2023-2024 |
|---|---|---|---|
| | வரவு | வரவு | வரவு |
| | 7.91 | 9.31 | 12.05 |

இந்நகராட்சியின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டும் பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் நகரமயமாதல் போன்ற காரணிகளால் பொதுமக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும் தற்போதுள்ள இந்நகராட்சியினை இரண்டாம்நிலை நகராட்சி தரத்திலிருந்து முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்திட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளையும் இந்நகராட்சி நிறைவு செய்வதால் இந்நகராட்சியின் தரத்தினை இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலை தரம் உயர்த்திட கோரி அரசுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

..2..

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு- | அரசாணை நிலை எண்.113 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ-வி(2)) நாள்.30.08.2019 இன்படி இரண்டாம் நிலை நகராட்சியை முதல் நிலை நகராட்சியாக தரம் உயத்திட இந்நகராட்சியின் கடந்த மூன்று ஆண்டுகளுக்கான வருமானம் ரூ.06.00 கோடிக்கு அதிகமாக உள்ளதால் குளித்தலை நகராட்சியினை இரண்டாம் நிலை நகராட்சியிலிருந்து முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்திட அரசுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1036/2024/சி1) |
| பொருள்- 04. | இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கீழ்க்கண்டுள்ள காலிமனையில் தரைவாடகை கடை திரு.ஆ-முருகானந்தம் குத்தகைதாரர் பெயரில் உள்ளது.<br>1). பொரி விற்பனை கடை – கடை எண்.10, வரி விதிப்பு எண்.083/120.<br>மேற்கண்ட கடையின் குத்தகைதாரர் திரு.ஆ.முருகானந்தம் 15.08.2019ஆம் தேதி இறந்துவிட்டார். எனவே, அவரது மனைவியும், வாரிசுமான திருமதி.மு.கல்யாணி என்பவர், அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்-03.07.2007ன்படி உரிய கட்டணங்கள் செலுத்தி உரிமத்தை பெயர் மாற்றம் செய்துதரக்கோரிய விண்ணப்பத்தின் அடிப்படையில் அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்-03.07.2007ன்படி, முதல் குத்தகைதாரர் திரு.ஆ.முருகானந்தம் அவர்களின் வாரிசுதாரரான திருமதி.மு.கல்யாணி, அனைத்து பாக்கி தொகைகளை செலுத்தியும் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி மன்றம் அவ்வப்போது நிர்ணயிக்கும் குத்தகை தொகை செலுத்த ஒப்புக்கொண்டதின் பேரிலும், குத்தகை உரிமத்தை திருமதி.மு.கல்யாணி பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு- | 1). மன்றம் அனுமதிக்கலாம்.<br>2). அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்-03.07.2007ன்படி மேற்கண்ட குத்தகை இனங்களை திரு.ஆ.முருகானந்தம் என்ற பெயரில் இருந்து திருமதி.மு.கல்யாணி என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1986/2023/அ1) |
| பொருள்-05. | குளித்தலை நகராட்சியானது 24 வார்டுகளும், 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 27910 மக்கள் தொகை கொண்ட இரண்டாம் நிலை நகராட்சியாகும். நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 30 ஆண்டுகள் ஆகியும் மிக பழமையான எந்த வசதிகள் செய்ய இயலாத கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, இந்நகராட்சியில் புதிய அலுவலக கட்டடம் கட்டுவதற்கு ரூ. 350.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்து Tufidco நிறுவனத்தின் அனுமதியும் (APPRAISAL) பெறப்பட்டுள்ளது. மதிப்பீடு தொகையில் 150.00இலட்சம் நகராட்சியின் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மீதம் தொகை ரூ.200.00இலட்சத்திற்கு குறைந்த வட்டியில் கடனாக பெற்று திட்டம் நிறைவேற்ற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு- | இந்நகராட்சியில் அலுவலக கட்டடம் கட்ட மதிப்பீட்டு தொகை ரூ.350.00இலட்சத்தில் ரூ.150.00இலட்சம் நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும் மீத தொகை ரூ.200.00இலட்சத்திற்கு குறைந்த வட்டியில் கடன் பெற்று புதிய அலுவலக கட்டடம் கட்டும் பணிக்கு மதிப்பீடு தயார்செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதிக்கு சமர்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1045/2024/இ1) |

பொருள்- 06. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN-47-AS-5370–ற்கு தகுதிச்சான்று பெறும் பணிக்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.55, நாள்- 11.03.2024ல் அனுமதிக்கப்பட்டதின்பேரில், 02.05.2024 அன்று விலைப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணிமனை விபரம் | விலைப்புள்ளி தொகை (GST உட்பட) |
|---|---|---|
| 1) | Janatha Auto Diesel Works,Tiruchirappalli-8. | ரூ.134048/- |
| 2) | Dominic Auto Garage,Tiruchirappalli-12. | ரூ.153400/- |

அலுவலக குறிப்பு- 1). மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த அளவிலான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Janatha Auto Diesel Works, Tiruchirappalli என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2). மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3). அரசு அனுமதித்த செலவினத்தைவிட கூடுதல் ஆகும் செலவினத்திற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.263/2024/எச்1)

பொருள்- 07. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10, வடக்குமுத்துராஜாதெரு கழிப்பிடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறு 2012-2013ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தற்போது உள்ள ஆழ்துளை கிணற்றில் நீர் வற்றியதால் புதிய ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. தற்போது பாராளுமன்ற தேர்தல் 2024ல் நடைபெற உள்ளதால், தேர்தல் நன்னடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சிகளின் சட்டம் 1998 பிரிவு 57(7)ன்கீழ் பணி மேற்கொள்ளும் பொருட்டு விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள திரு.அ.மாதேஸ்வரன், ஒப்பந்ததாரர், குளித்தலை அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று, பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு ஒப்பந்ததாரருக்கு தொகை ரூ.85000/- வழங்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.769/2024/இ1)

பொருள்- 08. குளித்தலை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) மூலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தினசரி மக்கும் குப்பை, மக்காத கழிவுகள் மற்றும் மறுசுழற்சிக்கு பயன்படுத்தப்படும் கழிவு போன்றவற்றை தினசரி சேகரிக்க 5 புதிய LCV வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாகனங்கள் 10000 கி.மீ-க்குமேல் இயக்கப்பட்டு வருகிறது. மேற்படி வாகனங்களை ஆயில் சர்வீஸ் மற்றும் சிறிய பழுதுகள் உடன் சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.948/2024/எச்1)

பொருள்- 09. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5ல் கடம்பர்கோவில் எதிர்புறம் வடக்கு மடவாள தெருவின் அருகில் அமைந்துள்ள தென்கரை வாய்க்காலில் ரூ.154.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பாலம் அமைத்தல் பணிகள் நடைபெற்று வருகிறது. பணிகள் நடைபெற்று வருவதால் தென்கரை வாய்க்காலில் தண்ணீர் செல்ல ஏதுவாக சிமெண்ட் குழாய் அமைத்து இருபுறமும் மண்மூட்டை அடுக்கி தற்காலிகமாக பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. தற்போது பாராளுமன்ற தேர்தல்-2024ல் நடைபெற உள்ளதால் தேர்தல் நன்னடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளட்சிகளின் சட்டம் 1998 பிரிவு 57(7)ன்கீழ் பணி மேற்கொள்ளும் பொருட்டு விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள திரு.C.நித்யானந்தம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு ஒப்பந்ததாரருக்கு தொகை ரூ.57150/- வழங்கப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1029/2024/இ1)

பொருள்- 10. குளித்தலை நகராட்சி நகரமைப்பு பிரிவில் மூலம் கட்டிட வரைபட வரைவாளர் அனுமதி வழங்கப்பட்டு பட வரைவாளர்கள் மூலம் கட்டிட அனுமதி விண்ணப்பம், இணையதளம் மூலம் பெறப்பட்டு நகரமைப்பு ஆய்வாளரால் ஆய்வு செய்து கட்டிட உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி இந்நகராட்சியில் கட்டிட பட வரைவாளர் அனுமதி பெற திரு.R.சதீஷ்குமார் என்பவர் இனையதளம் மூலம் பதிவு கட்டணம் இரண்டு முறை 5000/- வீதம் மொத்த தொகை 10000/- செலுத்தியுள்ளார். அன்னாரது முகவரி இந்நகராட்சி எல்லைப் பகுதியில் இல்லாத காரணத்தினால், இனையதளத்தில் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே அவர் செலுத்திய கட்டிட பட வரைவாளர் பதிவிற்கான கட்டணம் ரூ.10000/-ஐ, (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) திரு.R.சதீஷ்குமார் என்பவருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2117/2023/பி2)

பொருள்- 11. இந்நகராட்சிக்கு தேவையான 2024-2025ஆம் ஆண்டுக்கு படிவங்கள், பதிவேடுகள், ரசீதுகள் அனைத்து பிரிவுக்கும் தேவையான பேப்பர்கள் மற்றும் எழுது பொருட்கள் ஆகியவற்றினை தேவைக்கேற்ப அவ்வப்போது அரசு சார்பு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சியில் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/-க்கு (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்காணும் செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1035/2024/அ1)

..5..

பொருள்- 12. அரசாணை GO(MS) No.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்-09.09.2022ல் குளித்தலை நகராட்சி பகுதியில் அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் குடிநீர் அபிவிருத்தி பணிக்கு ரூ.1304.00 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது

| Sl No | Name of the Municipality | Estimate cost | Funding pattern | | |
|---|---|---|---|---|---|
| | | | Go I | GoTN | ULB |
| 1 | KulithalaiMunicipality : New Water Supply Improvement scheme: ( 6000 HSC) | 1304.00 | 652.00 | 391.00 | 261.00 Lakhs (KNMT-130.00Lakhs SUIDF-131.00Lakhs) |

மேற்கண்ட Amrut2.0 நகராட்சியின் பங்களிப்பு தொகை ரூ.261.00 இலட்சத்திற்கு KNMT திட்டத்தின்கீழ் 130.00 இலட்சம் பெறப்பட்டுள்ளது. மீததொகை ரூ.131.00 இலட்சத்திற்கு SUIDF திட்டத்தின்கீழ் கடனாக பெற்று திட்டம் நிறைவேற்ற வேண்டியுள்ளது. எனவே, Tamilnadu Urban Finance and Infrastructure Development Corporation Limited (TUFIDCO) நிறுவனத்தின் கடனாக பெற்று வட்டியுடன் இணைப்பில் கண்டுள்ள நிபந்தனைகள்படி கடனை பெற நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

FORMAT FOR COUNCIL RESOLUTION

1) Resolved that the KulithalaiMunicipality is authorised to borrow a loan amount of Rs.131.00 Lakhsfor ”New water supply Improvement Scheme’’ to Kulithalai Municipality as ULB share ( AMRUT 2.0)” from Tamil Nadu Urban Finance Infrastructure Development Corporation Ltd (TUFIDCO), under State Urban Infrastructure Development Fund (SUIDF), as per the terms and conditions prescribed by TUFIDCO and GO(MS) No.170, MA&WS (MA2) Dept., dated 07.12.2022

2) Resolved that the Kulithalai Municipality is hereby authorised to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other formalities including affixing the common seal of the Kulithalai Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of the KulithalaiMunicipality.

3) Resolved that the KulithalaiMunicipality bank account on the revenue collection such as property tax, professional tax and other revenue collections shall be escrowed/ to the extent of quarterly / monthly repayment commitment in favour of TUFIDCO. This exclusive escrowed account will be in existence till the time of clearing the loan and all other dues under this project to TUFIDCO.

4) Resolved that the Commissioner be and hereby authorized to make necessary budgetary provisions in the annual budget for the Kulithalai Municipality for the repayment of principal, interest and other monies due for the loan availed for this project proposal to TUFIDCO.

5) Resolved to agree, to adjust by the Government of Tamil Nadu from funds receivable for Kulithalai Municipality such as Devolution grant payment under State Finance Commission recommendation, other grants, share on tax and stamp duties due from the Government, in the event of default in repayment of principal, interest and other monies due to TUFIDCO in respect of loans availed for this project.

6) The Kulithalai Municipality shall submit an undertaking stating that if for any reason, the projected increase in property tax, professional tax etc., could not be implemented, the short fall if any arising in any period shall not affect the timely repayment of its dues to TUFIDCO and in such case the Government may be permitted to deduct the said dues out of the SFC funds on the first priority basis.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்,
2). மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1383/2022/இ1)

பொருள்- 13. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணிகள் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.34638/2022/EA2-SWM-12, நாள்-10.01.2023ன் வழிகாட்டுதலின்படி, R.K.கம்பெனி, பெரம்பலூர் நிறுவனத்தின்மூலம், தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு 14.05.2024ஆம் தேதியுடன் முடிவடையவுள்ளது. பொது சுகாதார தூய்மை பணி மிகவும் அத்தியாவசியமாகும். தற்போது பாராளுமன்ற தேர்தல்-2024 நன்னடத்தை விதிகள் அமலில் உள்ளதால், பொது மக்கள் மற்றும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனத்தின்மூலம் ஏற்கனவே பணி உத்தரவில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு 15.05.2024 முதல் 90 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்து தூய்மை பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). பாராளுமன்ற தேர்தல்-2024 நன்னடத்தை விதிகள் அமலில் உள்ளதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்தின்மூலம் 15.05.2024 முதல் 90 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்படுவதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1679/2021/எச்1)

பொருள்- 14. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும், நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக, பொது இடங்கள், பொது கழிப்பிடங்கள், பேருந்து நிலையம், கோவில் திருவிழாக்கள் மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் பணிகளுக்கு கிருமி நாசினி பொருட்கள் கொள்முதல் செய்ய ஓராண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,00,000/-க்கு (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1091/2023/எச்1)

பொருள்- 15. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2 மணத்தட்டை மேலகுடித்தெருவில் Swachh Bharat Mission (U) 2.0 திட்டத்தின்கீழ் சமுதாய கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு 7th meeting of State High Powered Committee, Date-14.03.2024 மூலம் ரூ.19.28 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது

திட்டத்தினை செயல்படுத்த நிதி விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

| Sl. No | Name of the work | Project cost | | |
|---|---|---|---|---|
| | | GOI Share 50% | GOTN Share 33% | ULB share 17% |
| 1 | Construction of Community toilet at Ward A, Block no.6, old Survey no. 186/3A Manathattaimelakudi street in kulithalai Municipality (12-seats, 4 Urinal Seats) | 9.64 lakhs | 6.36 lakhs | 3.28lakhs |

மேற்கண்ட பணிக்கு ரூ.3.28 இலட்சம் நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ரூ.3.28 இலட்சம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட திட்ட பணிக்கு நகராட்சியின் பங்குத் தொகை ரூ.3.28 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.509/2024/இ1)

பொருள்- 16. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.6 பகவதிஅம்மன்கோவில்தெருவில் Swachh Bharat Mission (U) 2.0 திட்டத்தின்கீழ் சமுதாய கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு 7th meeting of State High Powered Committee, Date-14.03.2024 மூலம் ரூ.19.28 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது
திட்டத்தினை செயல்படுத்த நிதி விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

| Sl. No | Name of the work | Project cost | | |
|---|---|---|---|---|
| | | GOI Share 50% | GOTN Share 33% | ULB share 17% |
| 1 | Construction of Community toilet at Ward C, Block no.18 Survey no.1 Bhagavathiammankovil street in kulithalai Municipality (12-seats, 4 Urinal Seats) | 9.64 lakhs | 6.36 lakhs | 3.28 lakhs |

மேற்கண்ட பணிக்கு ரூ.3.28 இலட்சம் நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ரூ.3.28 இலட்சம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட திட்ட பணிக்கு நகராட்சியின் பங்குத் தொகை ரூ.3.28 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்து கொள்ளவும் மன்ற அனுமதிக்கலாம்
(ந.க.எண்.510/2024/இ1)

பொருள்- 17. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுஎண்.11 பெரியபாலம் பகுதியில் Swachh Bharat Mission (U) 2.0 திட்டத்தின்கீழ் சமுதாய கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு 7th meeting of State High Powered Committee, Date-14.03.2024 மூலம் ரூ.19.28 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
திட்டத்தினை செயல்படுத்த நிதி விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

| Sl. No | Name of the work | Project cost | | |
|---|---|---|---|---|
| | | GOI Share 50% | GOTN Share 33% | ULB share 17% |
| 1 | Construction of Community toilet at Ward C, Block 4, Survey no.56 Periyapalam in Kulithalai Municipality (12-seats, 4 Urinal Seats) | 9.64 lakhs | 6.36 lakhs | 3.28 lakhs |

மேற்கண்ட பணிக்கு ரூ.3.28 இலட்சம் நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ரூ.3.28 இலட்சம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட திட்டபணிக்கு நகராட்சியின் பங்குத் தொகை ரூ.3.28 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்து கொள்ளவும் மன்ற அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.448/2024/இ1)

..8..

பொருள்- 18. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13 சேதுரெத்தினம்பிள்ளைதெருவில் Swachh Bharat Mission (U) 2.0 திட்டத்தின்கீழ் சமுதாய கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு 7th meeting of State High Powered Committee, Date-14.03.2024 மூலம் ரூ.19.28 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திட்டத்தினை செயல்படுத்த நிதி விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

| Sl. No | Name of the work | Project cost | | |
|---|---|---|---|---|
| | | GOI Share 50% | GOTN Share 33% | ULB share 17% |
| 1 | Construction of Community toilet at Ward D, Block 18, Old Survey no. 3 Sethurethinampillai street in kulithalai Municipality (12-seats, 4 Urinal Seats) | 9.64 lakhs | 6.36 lakhs | 3.28 lakhs |

மேற்கண்ட பணிக்கு ரூ.3.28 இலட்சம் நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ரூ.3.28 இலட்சம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட திட்ட பணிக்கு நகராட்சியின் பங்குத் தொகை ரூ.3.28 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்து கொள்ளவும் மன்ற அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.511/2024/இ1)

பொருள்- 19. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான சத்தியமங்கலம் உரக்கிடங்கில் சொந்தமான உரக்கிடங்கில் 5TPD திறன் கொண்ட Material Recovery Facility (MRF)அமைக்க Swachh Bharat Mission (U) 2.0 திட்டத்தின்கீழ் பணி மேற்கொள்ள 7th meeting of State High Powered Committee, Date-11.03.2024 மூலம் ரூ.42.50 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திட்டத்தினை செயல்படுத்த நிதி விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

| Sl. No | Name of the work | Project cost | | |
|---|---|---|---|---|
| | | GOI Share 50% | GOTN Share 33% | ULB share 17% |
| 1 | Construction of 5TPD Material Recovery Facilities centre at Satyamangalam compost yard in Kulithalai Municipality | 21.25 lakhs | 14.03 lakhs | 7.22 lakhs |

மேற்கண்ட பணிக்கு ரூ.7.22 இலட்சம் நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ரூ.7.22 இலட்சம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட திட்ட பணிக்கு நகராட்சியின் பங்குத் தொகை ரூ.7.22 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்து கொள்ளவும் மன்ற அனுமதிக்கலாம்
(ந.க.எண்.411/2024/இ1)

..9..

பொருள்- 20. குளித்தலை நகராட்சியில் பணிபுரிந்துவரும் பணியாளர்களில் சேமநலநிதி திட்டத்தின்கீழ் பணிபுரிந்துவரும் பணியாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற / இறந்த பணியாளர்களுக்கு அவர்களது சேமநல நிதி கணக்கின் இறுதி இருப்பு தொகைக்கான வட்டித்தொகை 2008-2009ஆம் ஆண்டுமுதல் நாளது தேதிவரை அரசிடமிருந்து கோரி பெறப்படவில்லை. இந்நிலையில், இந்நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பணியாளர்கள் மற்றும் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்கள் ஆகியோர், சம்பந்தப்பட்ட பணியாளர்கள் பணிபுரிந்த காலத்திற்கான சேமநல நிதி வட்டி தொகைகள் கோரி வருகின்றனர்.

எனவே, இந்நகராட்சியில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு சேமநல நிதிக்கான வட்டி தொகை வழங்க வேண்டியிருப்பதால், மேற்படி பணியாளர்களின் நலன் கருதியும், இப்பணியின் அவசர அவசியம் கருதியும் 2008-2009ஆம் ஆண்டுமுதல் 2023-2024ஆம் ஆண்டு வரை 16 ஆண்டுகளுக்கு ஆண்டு வாரியாக / பணியாளர்கள் வாரியாக பிரேரணை தயார் செய்யவும், 2008-2009 ஆம் ஆண்டுமுதல் 2023-2024ஆம் ஆண்டு வரை இந்நகராட்சியில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு 16 ஆண்டுகளுக்கும் மாதம் வாரியாக தனித்தனியாக சேமநல நிதி வட்டி கணக்கீடு செய்து பிரேரணை தயார் செய்து, இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை அவர்களுக்கு மேலனுப்பி வட்டி கோரி பெற வேண்டியுள்ளதால், தனியார் பட்டய கணக்கர் ஒருவரை நியமனம் செய்து, மேற்கண்ட பணிகள் அனைத்தும் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). அனுமதிக்கலாம்.
2). இந்நகராட்சி பணியாளர்களின் நலன் கருதியும், இப்பணியின் அவசர அவசியம் கருதியும், நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கைகள் மேறகொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1658/2016/பி1)

பொருள்- 21. குளித்தலை நகராட்சி 2017-2018ஆம் ஆண்டுமுதல் 2021-2022ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய சேவை வரி தொகைக்கான அபராதத் தொகை மற்றும் வட்டி தொகைகளை செலுத்தக்கோரி, உதவி ஆணையாளர், மத்திய சேவை வரி மற்றும் கலால், கரூர் அவர்களின் உத்தரவு எண்.OIO.No.16/GST/AC/2023, நாள்-15.09.2023ல் ரூ.20,76,100/- மற்றும் கண்காணிப்பாளர், மத்திய சேவை வரி மற்றும் கலால், கரூர் அவர்களின் உத்தரவு எண்.04/2023-GST(Supdt), நாள்-11.10.2023ல் ரூ.11,67,690/- செலுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தரவுகளின்படி அபராத தொகை மற்றும் வட்டித்தொகை இந்நகராட்சியிலிருந்து செலுத்த இயலாது என்பதால், மேற்கண்ட உத்தரவுகளின்மீது, சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் மேல்முறையீடு வழக்குகள் தொடர்ந்து, மேறக்ண்ட அபராத தொகை மற்றும் வட்டித்தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கக்கோர ஆகும் நீதிமன்ற செலவினங்களுக்கான உத்தேச தொகை ரூ.1.00 இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.4417/2018/அ1)

பொருள்- 22. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1, தெற்கு மணத்தட்டை குகைவழிப்பாதையில் குடிநீர் குழாய் பொருத்த பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க நகர்மன்றத் தலைவர் அவர்களின் அறிவுரைகளின்படி மேற்கண்ட குகைவழிப்பாதையில் குடிநீர் குழாய் பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.953/2024/இ1)

பொருள்- 23. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3ல் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் விண்ணப்பத்திற்கிணங்க, வேளாளர் தெருவில் உள்ள கழிப்பிடம் மராமத்து பணி மேற்கொள்ள நகர்மன்றத்தில் தீர்மனம் நிறைவேற்றப்பட்டது (தீர்மான எண்.12, நாள்-12.01.2024). மேலும், ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.25 இலட்சத்திலேயே கழிப்பிடம் மராமத்து பணி மற்றும் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவர் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும், தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1966/2023/இ1)

பொருள்- 24. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19, அண்ணாநகர் புறவழிச்சாலை பகுதியில் சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் அப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதியில் சிறுபாலம் அமைக்க பொதுமக்கள் மற்றும் நகர்மன்றத் தலைவர் அவர்களின் அறிவுரைகளின்படி சிறுபாலம் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவர் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.970/2024/இ1)

பொருள்- 25. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் குடிநீர் குழாய் உடைப்பு ஏற்படுவதால் பொதுமக்களின் நலன் மற்றும் அவசர அவசியம் கருதி உடன் குடிநீர் குழாய் உடைப்பினை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1011/2024/இ1)

..11.

பொருள்- 26. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2, மணத்தட்டை மேலகுடித்தெரு சமுதாய கழிப்பிடம், வார்டு எண்.6, பகவதிஅம்மன்கோவில்தெரு சமுதாய கழிப்பிடம் மற்றும் வார்டு எண்.13,சேதுரெத்தினம்பிள்ளைதெரு சமுதாய கழிப்பிடம் ஆகிய மூன்று சமுதாய கழிப்பிடங்கள் கட்டப்பட்டு 20 வருடங்கள் ஆன நிலையில் தற்போது பழுதடைந்து அபாயகரமான நிலையில் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட கழிப்பிடங்களை இடித்துவிட்டு புதிய கழிப்பிடம் கட்ட SBM 2.O திட்டத்தின்கீழ் நிதி வழங்க கோரப்பட்டது. தற்போது மேற்கண்ட கழிப்பிடங்கள் கட்ட SBM 2.O திட்டத்தின்கீழ் புதிய கழிப்பிடம் கட்ட ரூ.57.84 இட்சம் நிதி ஒதுக்கீடு செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டு உள்ளது. எனவே, மேற்கண்ட 3 சமுதாய கழிபபிடங்களை இடித்து அப்புறப்படுத்த நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.448/2024/இ1)

பொருள்- 27. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16,அண்ணாநகர் பிள்ளையார்கோவில் 2வது குறுக்குத்தெருவில் கழிவுநீர் வடிகால் அமைத்து சுமார் 25 ஆண்டுகளுக்குமேல் ஆனதால் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே, கழிவுநீர் செல்லமுடியாமல் அடைப்பு ஏற்பட்டு தெருக்களில் கழிவுநீர் தேங்குவதால் சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உண்டாகிறது. எனவே, நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்பேரில் அப்பகுதியில் புதியதாக கழிவுநீர் வடிகால் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.8.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1216/2024/இ1)

பொருள்- 28. குளித்தலை நகராட்சி பகுதிகளில் அம்ருத் 2.O திட்டத்தின்கீழ் குடிநீர் அபிவிருத்தி பணி மேற்கொள்ள ரூ.1304.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. எனவே, இத்திட்டத்தின்கீழ் அண்ணாநகர் புறவழிச்சாலையில் இருந்து மணப்பாறை சாலை வரை இருப்பு பாதையின் அடியில் குழாய்கள் பொருத்தி குடிநீர் இணைப்பு பணி மேற்கொள்வதற்கு தென்னக இரயில்வே துறையிடம் இருந்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட இடத்தில் குடிநீர் இணைப்பு பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு (ரூபாய் பதினைந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1198/2024/இ1)

பொருள்- 29. இந்நகராட்சி எல்லைக்குட்பட்டவார்டு எண்.23,சண்முகாநகர் பகுதியில் சுமார் 200 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அப்பகுதியில் கழிவுநீர் வடிகால் வசதி இல்லாததால் பொதுமக்கள் பயன்படுத்திவரும் கழிவுநீர் சாலையில் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. இந்நகராட்சியின் நகர்மன்ற துணைத் தலைவர் அவர்களின் கோரிக்கைக்கிணங்க சண்முகாநகர் மேற்கு பகுதி 1வது குறுக்குத்தெருமுதல் 3வது குறுக்குதெரு வரை சுமார் 50 மீட்டர் அளவில் கழிவுநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகை பொது நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1012/2024/இ1)

பொருள்- 30. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.23, சண்முகாநகர் (இரயில்வே கேட்) பகுதியில் கழிவுநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதன்பேரில் கீழ்க்கண்ட பணிகளுக்கு 12.07.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம்.

| வ. எண். | பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி எல்லைக்குட் பட்ட வார்டு எண்.23, சண்முகாநகர் (இரயில்வே கேட்) பகுதியில் கழிவுநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 7.75 | திரு.அ.மாதேஸ்வரன், குளித்தலை. | 0.04% குறைவு |
| | | | திரு.எம்.செந்தில் குமார், குளித்தலை. | 0.51% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற திரு.அ.மாதேஸ்வரன், குளித்தலை என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்- 31. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1, தெற்கு மணத்தட்டை குகைவழிப் பாதையில் குடிநீர் குழாய் பொருத்துதல் பணிக்கு நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின்பேரில் கீழ்க்கண்ட பணிகளுக்கு 12.07.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம்.

| வ. எண். | பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி எல்லைக்குட் பட்ட வார்டு எண்.1, தெற்கு மணத்தட்டை குகைவழிப் பாதையில் குடிநீர் குழாய் பொருத்துதல் | 2.30 | திரு.எம்.செந்தில் குமார், குளித்தலை. | 0.09% குறைவு |
| | | | திரு.அ.மாதேஸ்வரன், குளித்தலை. | 1.06% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற திரு.எம்.செந்தில்குமார், குளித்தலை என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.953/2024/இ1)

பொருள்- 32. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்டவார்டு எண்.14, ஆண்டார்மெயின்ரோடு பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின்பேரில் கீழ்க்கண்ட பணிகளுக்கு 12.07.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம்.

| வ.எண். | பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி எல்லைக்குட் பட்ட வார்டு எண்.14, ஆண்டார்மெயின்ரோடு பகுதியில் சிறுபாலம் அமைத்தல். | 3.00 | திரு.எம்.செந்தில் குமார், குளித்தலை. | 0.13% குறைவு |
| | | | திரு.அண்ணாதுரை, குளித்தலை. | 0.30% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற திரு.எம்.செந்தில்குமார், குளித்தலை என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.408/2024/இ1)

பொருள்- 33. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.6 சபாபதிநாடார்தெரு வாய்க்கால்மேட்டு பகுதியில் மினிபவர் பம்ப் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின்பேரில் கீழ்க்கண்ட பணிகளுக்கு 12.07.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம்.

| வ.எண். | பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி எல்லைக்குட் பட்ட வார்டு எண்.6 சபாபதிநாடார்தெரு வாய்க்கால்மேட்டு பகுதியில் மினிபவர் பம்ப் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | 2.00 | திரு.அ.மாதேஸ்வரன் | 0.09 % குறைவு |
| | | | திரு.எம்.செந்தில் குமார் | 0.70% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற திரு.அ.மாதேஸ்வரன், குளித்தலை என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.485/2024/இ1)

..14..

பொருள்- 34. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்-9ல் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு அருகில் சிறுபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின்பேரில் கீழ்க்கண்ட பணிகளுக்கு 12.07.2024 ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம் .

| வ. எண். | பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி வார்டு எண்-9ல் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு அருகில் சிறுபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் | 1.00 | திரு.எம்.செந்தில் குமார், குளித்தலை | 0.29% குறைவு |
| | | | திரு.அண்ணாதுரை, குளித்தலை | 0.50% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற திரு.எம்.செந்தில்குமார், குளித்தலை என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.410/2024/இ1)

பொருள்- 35. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்-12 மலையப்பநகர் பகுதியில் சிறுபாலம் அமைத்தல் நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின்பேரில் கீழ்க்கண்ட பணிகளுக்கு 12.07.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம்

| வ. எண். | பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி வார்டு எண்-12 மலையப்பநகர் பகுதியில் சிறுபாலம் அமைத்தல் | 2.00 | திரு.அ.மாதேஸ்வரன், குளித்தலை | 0.20 % குறைவு |
| | | | திரு.எம்.செந்தில்குமார், குளித்தலை | 0.49 % அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற திரு.அ.மாதேஸ்வரன், குளித்தலை என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.333/2024/இ1)

பொருள்- 36. குடியிருப்பு கட்டடங்கள் கட்ட சுயசான்றின் அடிப்படையில் இணையவரி(Single Window Portal) கட்டட அனுமதி வழங்குவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து வெளியிப்பட்ட, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி.1) துறை அரசாணை (நிலை) எண்.94, நாள்-18.07.2024 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1365/2024/பி2)

பொருள்- 37. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் 'குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் சரிசெய்தல் நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின் பேரில் கீழ்க்கண்ட பணிகளுக்கு 12.07.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம்

| வ. எண். | பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி எல்லைக்குட் பட்ட 24 வார்டுகளில் 'குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் சரிசெய்தல் | 2.75 | திரு.அ.மாதேஸ்வரன், குளித்தலை | 0.16 % குறைவு |
| | | | திரு.எம்.செந்தில் குமார், குளித்தலை | 0.81 % அதிகம்ம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற திரு.அ.மாதேஸ்வரன், குளித்தலை என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணியை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1011/2024/இ1)

பொருள்- 38. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19 அண்ணாநகர் புறவழிச்சாலை பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின் பேரில் கீழ்க்கண்ட பணிகளுக்கு 12.07.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம்

| வ. எண். | பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி எல்லைக்குட் பட்ட வார்டு எண்.19 அண்ணாநகர் புறவழிச்சாலை பகுதியில் சிறுபாலம் அமைத்தல் | 3.50 இலட்சம் | திரு.எம்.செந்தில் குமார், குளித்தலை | 0.13% குறைவு |
| | | | திரு. அண்ணாதுரை குளித்தலை | 0.32% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற திரு.எம்.செந்தில்குமார், குளித்தலை என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணியை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.970/2024/இ1)

பொருள்- 39. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2, சங்கிலிராயன்கோவில்தெரு மேற்கு பகுதியில் சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மேற்கண்ட வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட மனுவிற்கிணங்க, குடிநீர் பற்றாக்குறை தவிர்க்கும்பொருட்டு, மினி பவர் பம்ப் மற்றும் அப்பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1280/2024/இ1)

பொருள்- 40. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் வெளிக்கொணர்வு முகமைமூலம் ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணிகள் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.34638/2022/EA2-SWM-12, நாள்-10.01.2023ன் வழிகாட்டுதலின்படி, R.K.கம்பெனி, பெரம்பலூர் நிறுவனத்தின்மூலம், தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இப்பணி 15.05.2024 உடன் ஓராண்டு முடிவுற்ற நிலையில், மேலும், ஓராண்டு காலத்திற்கு பணி நீடிப்பு செய்யவும், ஒப்பந்த விதிகளின்படி இரண்டாம் ஆண்டிற்கு 10% உயர்வு செய்து வழங்கக்கோரி R.K.கம்பெனி, பெரம்பலூர் நிறுவனத்தின் விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட நிறுவனத்தின்மூலம் ஒப்பந்த விதிகளின்படி ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகித அடிப்படையில் 10% தொகை கூடுதலாக செலவினம் மேற்கொள்ளவும், மேலும் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த காலத்தை 14.05.2025 வரை நீட்டிப்பு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், 14.05.2025 வரை மேலும் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்- 41. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் இந்நகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள 4 பள்ளிகள் (துவக்கப்பள்ளி-1, நடுநிலைப்பள்ளிகள்-3), அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய 6-பள்ளிகளில் உள்ள கழிவறை சுத்தம் மற்றும் தூய்மை பணிகள் ஸ்ரீமகாமாரியம்மன் மகளிர் சுயஉதவிக்குழு, குளித்தலை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிக்கான காலம் முடிவடைய உள்ளதால், பொது சுகாதாரம் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்களின் நலன் கருதி, மேலும் ஓராண்டு காலத்திற்கு மேற்கண்ட மகளிர் சுயஉதவிக்குழு மூலம் நிபந்தனைகளுக்குட்பட்டு பணிகளை மேற்கொள்ளவும், கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட 2023-2024ஆம் ஆண்டுக்கான ஊதிய தர விலையுடன், இப்பணியாளர்களுக்கு நகராட்சியின்மூலம் 13% EPF தொகை கூடுதலாக செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2024-2025ஆம் ஆண்டுக்கான கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1153/2023/எச்1)

| | |
|---|---|
| பொருள்- 42. | குளித்தலை நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்மூலம் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொது சுகாதாரப் பணிகள் மற்றும் MCC பணிகள் மேற்கொள்ள 2024-2025ஆம்ஆண்டுக்கு தளவாட பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு- | 1). மன்றம் அனுமதிக்கலாம்.<br>2). மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும், தளவாட பொருட்களை, அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனம் / ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கிக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1387/2024/எச்1) |
| பொருள்- 43. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுஎண். 7 என்.ஜி.ஜி.ஓ.காலனி பகுதியில் சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் அப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் சிறுபாலம் அமைக்க நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரைகளின்படி சிறுபாலம் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு- | 1). மன்றம் அனுமதிக்கலாம்.<br>2). மேற்கண்ட செலவினத் தொகை பொதுநிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1396/2024/இ1) |
| பொருள்- 44. | குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13 மலையப்பநகர் பகுதியில் நகர்மன்ற தலைவர் அவர்களிடம் அறிவுரைகளின் பேரில் குடிநீர் பற்றாக்குறை தவிர்க்கும் பொருட்டு மினி பவர்பம்ப் மற்றும் அப்பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவல குறிப்பு- | 1).மன்றம் அனுமதிக்கலாம்.<br>2).மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1330/2024/இ1) |
| பொருள்- 45. | குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20ல் உழவர் சந்தை அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் அமைக்க நகர் மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின்படி மற்றும் நகர் மன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கலப்புக்காலனி 1வது குறுக்கு தெரு முதல் கலப்புக்கலனி 4வது குறுக்கு தெரு வரை உள்ள பொதுமக்களுக்கு திறந்த வெளி உடற்பயிற்சி கூடம் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு- | 1). மன்றம் அனுமதிக்கலாம்.<br>2). மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1110/2024/இ1) |

பொருள்- 46. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட மாரியம்மன்கோவில் அருகில் குளித்தலை நகராட்சி நடுநிலைப்பள்ளியில் சுமார் 500 மாணவ, மாணவியர் படித்து வருகின்றனர். நகராட்சி நடுநிலைப்பள்ளி தலைமைஆசிரியர் அவர்களின் கோரிக்கையின்பேரில் பள்ளி வளாகத்தில் குடிநீர் வசதி மேற்கொள்ளுதல், வர்ணம் பூசுதல், கழிவறையில் டைல்ஸ்ஒட்டுதல், வகுப்பறையில் டைல்ஸ் ஒட்டுதல் மற்றும் கூடுதல் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ18.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ. எண் | பணிகளின் விவரம் | உத்தேச மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1 | குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட மாரியம்மன்கோவில் அருகில் நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் குடிநீர் வசதி மேற்கொள்ளுதல், வர்ணம்பூசுதல், கழிவறையில் டைல்ஸ் ஒட்டுதல், வகுப்பறையில் டைல்ஸ் ஒட்டுதல் மற்றும் கூடுதல் பணி மேற்கொள்ளுதல் | 18.00 இலட்சம் |

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.969/2024/இ1)

பொருள்- 47. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22 தெப்பக்குளத்தெருவில் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறைகளின் பேரில் கோடைகால குடிநீர் பற்றாக்குறை தவிர்க்கும் பொருட்டு மினி பவர்பம்ப் மற்றும் அப்பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- 1).மன்றம் அனுமதிக்கலாம்.
2).மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.1395/2024/இ1)

பொருள்- 48. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் ஆய்வுக் கூட்டங்கள் நேரடி தலஆய்வுகள் மற்றும் நகராட்சி அறிவிப்புகள் ஆகியவற்றை சமூக ஊடகங்களில் Twitter, Facebook, whatsapp, Instagram மற்றும் சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்யவும் மேலும் பொதுமக்களிடம் இருந்து சமூக ஊடகம் மற்றும் வலைதளங்கள் மூலம் வரப்பெறும் குறைகளை தொடர்ந்து கண்காணித்தல் ஆகிய பணிகளை தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்கள் சேலம் மண்டலம் முழுவதும் ஒருங்கிணைத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிக்கு உத்தேச செலவினம் மாதம் ரூ 1.00 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது, தற்போது இந்த செலவினத்தில் நமது குளித்தலை நகராட்சியின் பங்களிப்பு ரூ.4200/- நிர்ணயிக்கப்பட்டு உள்ளது . எனவே சமூக ஊடக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மாதம் ஒன்றுக்கு ரூ.4200/- செலவினம் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1246/2024/இ1)

பொருள்- 49. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4 கடம்பர்கோவில் பகுதியில் அமைந்துள்ள கரிகாலன்நகரில் நகர்மன்ற தலைவர்அவர்களின் அறிவுரைகளின்பேரில் கோடைகால குடிநீர் பற்றாக்குறை தவிர்க்கும் பொருட்டு மினி பவர்பம்ப் மற்றும் அப்பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- 1).மன்றம்அனுமதிக்கலாம்.
2).மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.1394/2024/இ1)

பொருள்- 50. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 மார்க்கெட் தெருவில் அமைந்துள்ள அடிபம்பினை அகற்றிவிட்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கிணங்க குடிநீர் பற்றாக்குறை தவிர்க்கும் பொருட்டு மினி பவர்பம்ப் மற்றும் அப்பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- 1).மன்றம் அனுமதிக்கலாம்.
2).மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1416/2024/இ1)

பொருள்- 51. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 மாரியம்மன்கோவில் எதிர்புரம் அமைந்துள்ள அடிபம்பினை அகற்றிவிட்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கிணங்க குடிநீர் பற்றாக்குறை தவிர்க்கும் பொருட்டு மினி பவர்பம்ப் மற்றும் அப்பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.1415/2024/இ1)

பொருள்- 52. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 வைசியால் தெருவில் சுமார் 50 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அப்பகுதியில் அமைந்துள்ள சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால் அப்பாலத்தில் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் தெருக்களில் வெளியேறுவதால் பொதுமக்களுக் குசுகாதாரம் சீர்கேடு ஏற்படுகிறது. மேலும் இப்பகுதியானது மக்கள் பயன்படுத்தும் பிரதான சாலை என்பதாலும் உடன் இப்பாலத்தை சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் மராமத்து பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1).மன்றம் அனுமதிக்கலாம்.
2),மேற்கண்ட செலவினத் தொகை பொதுநிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.1413/2024/இ1)

..20..

பொருள்- 53. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-AS-5109 & TN-47-AS-5098 ஆகிய இரண்டு வாகனங்களுக்கு தகுதிசான்றினை புதுப்பிக்க பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு உதிரிபாகங்கள் மாற்றம் செய்யவேண்டி உள்ளது. எனவே, இரண்டு வாகனங்களுக்கான உத்தேச செலவின மதிப்பீடு ரூ.1,40,000/-க்கு (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்படி வாகனத்தின் கூடுதல் செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் பின்னேற்பு பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.965/2024/எச்1)

பொருள்- 54. கரூர் மாவட்டம் குளித்தலை வட்டம் வார்டு எண்.1 மணத்தட்டையில் 02.08.2024 அன்று மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் டாக்டர்.கே.எஸ்.பழனிசாமி இ.ஆ.ப. அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் 2 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வு செய்தபின் குடிநீர் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு அப்பகுதியில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கும் பணி மேற்கொள்ள பரிந்துரை செய்தார். எனவே மேற்கண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி சுற்றி சுற்றுசுவர் அமைக்க ஆகும் உத்தேச செலவீனம் ரூ. 15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகை குடிநீர் நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.1416/2024/இ1)

பொருள்- 55. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7 காவேரிநகர் நுழைவு வாயில் தூண்கள் இடித்து அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ள நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின்பேரில் கீழ்க்கண்ட பணிகளுக்கு 01.08.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம்.

| வ. எண் | பணி விவரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | குளித்தலை நகராட்சி எல்லைக்குட் பட்ட வார்டு எண்.7 காவேரி நகர் நுழைவு வாயில் தூண்கள் இடித்து அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் | ரூ.50000/- | திரு.செந்தில்குமார், குளித்தலை | 0.05% குறைவு |
| | | | திரு.அ.மாதேஸ்வரன், குளித்தலை | 0.55% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற திரு.செந்தில்குமார், குளித்தலை என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1124/2023/இ1)

பொருள்- 56. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பேருந்து நிலைய பகுதியில் அமைந்துள்ள சங்கு ஒலிப்பானை இடித்து அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ள நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின்பேரில் கீழ்க்கண்ட பணிகளுக்கு 01.08.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம்

| வ. எண் | பணி விவரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | குளித்தலை நகராட்சி எல்லைக்குட் பட்ட பேருந்து நிலைய பகுதியில் அமைந்துள்ள சங்கு ஒலிப்பானை இடித்து அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் | ரூ.50000/- | திரு.செந்தில்குமார், குளித்தலை | 0.05% குறைவு |
| | | | திரு.அ.மாதேஸ்வரன், குளித்தலை | 0.25% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற திரு.செந்தில்குமார், குளித்தலை என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.970/2024/இ1)

பொருள்- 57. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18, சுங்கவாயில் வடபுறம் பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு அருகில் ஒரு கடையும், மேற்படி கடைகளுக்கு மாடி படியும் அமைத்தல் பணிக்கு நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின்பேரில் கீழ்க்கண்ட பணிகளுக்கு 01.08.024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம்

| வ. எண் | பணி விவரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | குளித்தலை நகராட்சி எல்லைக்குட் பட்ட வார்டு எண்.18, சுங்கவாயில் வடபுறம் பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு அருகில் ஒரு கடையும், மேற்படி கடைகளுக்கு மாடி படியும் அமைத்தல் | 12.00 | திரு.செந்தில்குமார், குளித்தலை | 0.10% குறைவு |
| | | | திரு.அ.மாதேஸ்வரன், குளித்தலை | 0.45% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற திரு.செந்தில்குமார், குளித்தலை என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.970/2024/இ1)

பொருள்- 58. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டெங்கு கொசு ஒழிப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொசு புழுக்களை ஒழிப்பதற்கு பயன்படுத்தப்பட்டுவரும் சிறிய புகைபோக்கி இயந்திரம்-4 (நான்கு மட்டும்) மற்றும் பெரிய புகைபோக்கி இயந்திரம்-1 ஆகியவற்றின் பழுது நீக்கம் செய்ய ஓராண்டுக்கு வருடாந்திர பராமரிப்பு செலவினம் ரூ.1,20,000/-க்கு (ரூபாய் ஒரு லட்சத்து இருபது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்- 59. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 18 அண்ணாநகர் புறவழிச் சாலையில் (வெல்டிங் பட்டறை அருகில்) உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் அப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் சிறுபாலம் அமைக்க நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கிணங்க சிறுபாலம் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1) .மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகை பொது நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1480/2024/இ1)

பொருள்- 60. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுவரும் 11 எண்ணிக்கையிலான மின்கல வாகனங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. மேலும் மின்கலவாகனங்களில் சக்கரம், லித்தியம் பேட்டரி, பிரேக் ஒயர் போன்ற பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1214/2024/இ1)

பொருள்- 61. குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில் பழைய பயணியர் நிழற்குடை வடக்கு பக்கமாக அமைந்துள்ளதால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. எனவே, மேற்கண்ட பயணியர் நிழற்குடையை அகற்றி வடக்கு பகுதி உள்நோக்கி மாற்றி அமைக்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1447/2024/இ1)

பொருள்- 62. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான சத்தியமங்கலம் உரக்கிடங்கில் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், போர்வெல் தூர்வாறுதல், Conveyor machine பராமரிப்பு பணி, Jcb மூலம் மண் சமண் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.95 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1461/2024/இ1)

..23..

பொருள்- 63. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுவரும் 27 எண்ணிக்கையிலான தள்ளு வண்டிகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. மேலும் தள்ளு வண்டிகளின் சக்கரம் தேய்ந்தும், சக்கரம் சுற்றாமலும், வெல்டிங் மற்றும் பெயிண்டிங் போன்ற பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1374/2024/இ1)

பொருள்- 64. குளித்தலை நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுவரும் மின்கல வாகனங்களுக்கு speaker, mobile mike போன்ற மின்னனு சாதனங்கள் வாங்க நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரைகளின்பேரில் மேற்கண்ட மின்னனு சாதனங்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.80,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1449/2024/இ1)

பொருள்- 65. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12 பெரியார்நகர் பகுதியில் உள்ள பூங்காவிற்கு விளையாட்டு சாதனங்கள் வாங்குதல், மரக்கன்றுகள் நடுதல் மற்றும் இதர பணி மேற்கொள்ளுதல் பணிக்கு நகர்மன்றத்தில் ஒப்புதல் வழங்கியதின் பேரில் கீழ்க்கண்ட பணிகளுக்கு 13.08.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம்.

| வ. எண் | பணி விவரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | குளித்தலை நகராட்சி எல்லைக்குட் பட்ட வார்டு எண்.12 பெரியார்நகர் பகுதியில் உள்ள பூங்காவிற்கு விளையாட்டு சாதனங்கள் வாங்குதல், மரக்கன்றுகள் நடுதல் மற்றும் இதர பணி மேற்கொள்ளுதல் | 3.90 | திரு.அ.மாதேஸ்வரன், குளித்தலை | 0.31 % குறைவு |
| | | | திரு.எம்.செந்தில் குமார், குளித்தலை | 1.94% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்ற திரு.அ.மாதேஸ்வரன், குளித்தலை என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.332/2024/இ1)

..24..

பொருள்- 66. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18 மற்றும் 19ல் அண்ணாநகர் புறவழிச் சாலையில் அமைந்துள்ள பேவர் பிளாக்கு அருகாமையில் உள்ள வடிகாலின் மொத்தம் 410 மீட்டர் உள்ள மேல்புறத்தில் புதியதாக RCC Slab மற்றும் வண்டல் மண் அடித்தல் போன்ற பணிகள் மேற்கொண்டு, பொது மக்கள் நடை பயிற்சி மேற்கொள்வதற்கு ஏதுவாக மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1418/2024/இ1)

பொருள்- 67. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட பரிசல்துறை சாலையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.150.00 இலட்சத்தில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதியுடன் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரும் நிலையில் உள்ளது. அரசாணை நிலை எண்.228, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்-13.11.2008ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, நவீன எரிவாயு தகனமேடை பராமரிக்க Sri Dharshni Foundation, Thuraiyur என்ற தொண்டு நிறுவனத்திடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தற்பொழுது லால்குடி மற்றும் துறையூர் நகராட்சியில் எரிவாயு தகன மேடை பராமரிக்கும் பணி ஏற்று இயக்கி வருகிறது. புதியதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள நவீன தகன மேடையை ஒப்படைக்கும் நாள்முதல் மூன்று வருடத்திற்கு பராமரிக்க Sri Dharshni Foundation தொண்டு நிறுவனம் அவர்களிடம் ஒப்பந்தம் செய்துகொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இந்நவீன எரிவாயு தகனமேடையில் இறந்தவர்களின் உடலினை தகனம் செய்ய கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்யலாம்.

| | | |
|---|---|---|
| 1) | எரியூட்டு கட்டணம் | ரூ.3000/- |
| 2) | நகராட்சி எல்லைக்கு வெளியே சவஊர்த்தி கட்டணம் கூடுதலாக ஒரு கி.மீக்கு | ரூ.20/- |

அலுவலக குறிப்பு- எரிவாயு தகன மேடையில் ஒரு சடலத்தை எரியூட்ட நிர்ணயம் செய்யப்பட்ட கட்டண விகிதத்தின் அடிப்படையிலும், அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அடிப்படையிலும் Sri Dharshni Foundation, Thuraiyur நிறுவனத்திடம் புதியதாக அமைக்கப்பட்டுள்ள எரிவாயு (LPG) தகன மேடை மூன்று ஆண்டு காலத்திற்கு பராமரிக்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண்.1475/2021/இ1)

பொருள்- 68. இந்நகராட்சியில் உள்ள அலுவலக கட்டடம் கட்டப்பட்டு சுமார் 70 வருடங்கள் ஆனது. இதனால் மேற்கண்ட அலுவலகம் மிக பழமையானதால் புதிய அலுவலகம் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்க DPR தயார் செய்ய தேவையான Estimate,Drawing, Soil Test, Design ஆகியவை ஆலோசகர் மூலம் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.2.50 இலட்சம் (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். மேற்கண்ட பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணிக்கு நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1458/2024/இ1)

..25..

பொருள்- 69. இந்நகராட்சியில் புதிதாக வாங்கப்பட்ட பிரிண்டர்களின் டோனர்கள் முடியும் வருவாயில் உள்ளதால், கீழ்க்கண்ட டோனர்கள் வாங்க வேண்டி உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | 137 A Tonner | = | 20 Nos |
| 2) | 152 A Tonner | = | 10 Nos |
| 3) | Epson 005 | = | 1 No |
| 4) | Epson 003 | = | 3 Nos |

மேற்கண்ட டோனர்கள் அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்திடம் கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்கு உண்டான உத்தேச செலவின தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1460/2024/இ1)

பொருள்- 70. இந்நகராட்சியில் இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான 1.22 ஏக்கர் நிலத்தினை மாத வாடகை அடிப்படையில் பெற்று 40 ஆண்டுகளாக குளித்தலை நகராட்சி பேருந்து நிலையம் செயல்பட்டுவரும் நிலையில், இன்றைய தேதியில் மாத வாடகை ரூ.85,100/- ஆக உள்ளது. தற்போது கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.74.00 இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிலையத்தில் அபிவிருத்தி பணிகள் மேற்கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டும் மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.34.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையிலும், தமிழக அரசின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாடி வருவதாலும் கலைஞர் அவர்களை முதன்முதலில் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுத்த தொகுதி குளித்தலை சட்டமன்ற தொகுதி என்பதால் அதனை பெருமைபடுத்தும் வகையில் குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தினை ‘‘குளித்தலை நகராட்சி கலைஞர் நூற்றாண்டு விழா பேருந்து நிலையம்’’ என பெயர் சூட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் தற்போது அரசு முதன்மை செயலாளர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.4801/ந.நி-5(2)/2024-1, நாள்-23.07.2024 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17788/2024/டிபி1, நாள்-05.06.2024ல் நகர்மன்றத்தின் அனுமதி பெற தெரிவிக்கப்பட்டது. எனவே, குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தினை ‘‘குளித்தலை நகராட்சி கலைஞர் நூற்றாண்டு விழா பேருந்து நிலையம்’’ என பெயர் சூட்ட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.732/2022/இ1)

| | |
|---|---|
| பொருள்- 71. | குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24, மலையப்பநகர் காலனி மேற்கு பகுதியில் சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் அப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதியில் சிறு பாலத்தினை சீரமைப்பு பணி மேற்கொள்ள பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கிணங்க சிறு பாலம் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.60 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவல குறிப்பு- | 1). மன்றம் அனுமதிக்கலாம்.<br>2). மேற்கண்ட செலவினத் தொகை பொது நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும், மேற்படி பணியினை தகுந்த ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1175/2024/இ1) |
| பொருள்- 72. | தனி வட்டாட்சியர், சமுக பாதுகாப்புத் திட்டம், குளித்தலை அவர்களின்கடிதம் ந.க.எண்.2/1834/2023, நாள்-12.08.2024ல், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குகீழ் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது), சமுக பாதுகாப்பு திட்டத்தின்மூலம் நிதி வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி தொகையினை மத்திய அரசின் ஒய்வூதிய திட்டத்தின்கீழ் நிதி பெறுவதற்காக நகராட்சியின்மூலம் பராமரிக்கப்பட்டுவரும் வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ளவர்களின் பெயர் பட்டியலில், மேற்கண்ட பயனாளிகளின் பெயரினை சேர்த்து பட்டியல் எண் (BPL Number) வழங்கக்கோரியுள்ளார்.<br>மேற்படி தனி வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத் திட்டம், குளித்தலை அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற பட்டியலில் உள்ள 281 பயனாளிகளின் பெயர்களை, வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ளவர்களுக்கான பட்டியலில் சேர்த்து, பட்டியல் எண்(BPL Number) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு- | 1). மன்றம் அனுமதிக்கலாம்.<br>2). நகராட்சி பகுதிகளில் வசித்துவரும் பொதுமக்களிடமிருந்து இனிவரும் காலங்களில் பெறப்படும் வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ளவர்களின் பட்டியலில் பெயர் சேர்க்க கோரும் விண்ணப்பங்களை, நகர்மன்றத் தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின் அடிப்படையில், வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ளவர்களின் பட்டியலில் பெயர் சேர்த்துக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1485/2024/பி2) |

பொருள்- 73. பள்ளிக் கல்வித் (அகஇ2) துறை, அரசாணை(நிலை) எண்.144, நாள்-28.06.2024ன்படி 2024-2026 ஆண்டுக்கான பள்ளி மேலாண்மைக்குழு மறு கட்டமைப்பு வழிகாட்டு நெறிமுறைகளின்படி, குளித்தலை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆரம்பபள்ளி, நடுநிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் பள்ளி ஒன்றுக்கு இரண்டு உள்ளாட்சி பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட வேண்டும். அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட ஆறு பள்ளிகளுக்கு பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் கீழ்க்கண்ட விவரப்படி தேர்வு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது

| வ. எண். | பள்ளியின் விபரம் | வார்டு எண்கள் | நகர்மன்ற உறுப்பினர்கள் பெயர் | கைபேசி எண் |
|---|---|---|---|---|
| 1) | நகராட்சி நடுநிலைப்பள்ளி, மணத்தட்டை | 01<br>02 | திருமதி.வீ.கண்ணகி<br>திரு.கு.சந்துரு | 9585061234<br>9894216757 |
| 2) | நகராட்சி துவக்கப்பள்ளி, தேவதானம் | 03<br>18 | திரு.எஸ்.பொன்னர்<br>திருமதி.வ.ஜெயந்தி | 9698993650<br>8098544224 |
| 3) | நகராட்சி நடுநிலைப்பள்ளி, கடம்பர்கோவில் | 04<br>05 | திரு.பி.பிச்சை<br>திருமதி.மு.சரோஜா | 9659859325<br>9944236199 |
| 4) | நகராட்சி நடுநிலைப்பள்ளி, மாரியம்மன்கோவில் | 10<br>22 | திருமதி.ஜெ.சமீமா<br>திருமதி.ஆ.கீதா | 9790271777<br>9442777377 |
| 5) | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, புதுக்கோர்ட்தெரு | 07<br>21 | திரு.கா.சையத் உசேன்<br>திருமதி.க.மஞ்சு | 7708477794<br>9994961628 |
| 6) | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, டவுன்ஹால்தெரு | 09<br>10 | திரு.ரா.ஜெய்சங்கர்<br>திருமதி.ஜெ.சமீமா | 9444888101<br>9790271777 |

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). பள்ளிக் கல்வித்(அகஇ2) துறை, அரசாணை(நிலை) எண்.144, நாள்-28.06.2024ல் தெரிவிக்கப்பட்டுள்ள பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு நடைமுறைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி குழு உறுப்பினர் தேர்வு செய்யப்பட்டுள்ளதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1490/2024/பி2)

-------

**குளித்தலை நகராட்சி**
**குளித்தலை நகர்மன்றத்தின் 27.08.2024ஆம் தேதிய**
**சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்**

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 119 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 120 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 121 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 122 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 123 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 124 | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 7 | 7 | 125 | பதிவு செய்யப்பட்டது. |
| 8 | 8 | 126 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 127 | பதிவு செய்யப்பட்டது. |
| 10 | 10 | 128 | அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 11 | 129 | அனுமதிக்கப்பட்டது. |
| 12 | 12 | 130 | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 131 | அனுமதிக்கப்பட்டது. |
| 14 | 14 | 132 | அனுமதிக்கப்பட்டது. |
| 15 | 15 | 133 | அனுமதிக்கப்பட்டது. |
| 16 | 16 | 134 | அனுமதிக்கப்பட்டது. |
| 17 | 17 | 135 | அனுமதிக்கப்பட்டது. |
| 18 | 18 | 136 | அனுமதிக்கப்பட்டது. |
| 19 | 19 | 137 | அனுமதிக்கப்பட்டது. |
| 20 | 20 | 138 | அனுமதிக்கப்பட்டது. |
| 21 | 21 | 139 | அனுமதிக்கப்பட்டது. |
| 22 | 22 | 140 | அனுமதிக்கப்பட்டது. |
| 23 | 23 | 141 | அனுமதிக்கப்பட்டது. |
| 24 | 24 | 142 | அனுமதிக்கப்பட்டது. |
| 25 | 25 | 143 | அனுமதிக்கப்பட்டது. |
| 26 | 26 | 144 | அனுமதிக்கப்பட்டது. |
| 27 | 27 | 145 | அனுமதிக்கப்பட்டது. |
| 28 | 28 | 146 | அனுமதிக்கப்பட்டது. |
| 29 | 29 | 147 | அனுமதிக்கப்பட்டது. |
| 30 | 30 | 148 | அனுமதிக்கப்பட்டது. |
| 31 | 31 | 149 | அனுமதிக்கப்பட்டது. |
| 32 | 32 | 150 | அனுமதிக்கப்பட்டது. |
| 33 | 33 | 151 | அனுமதிக்கப்பட்டது. |
| 34 | 34 | 152 | அனுமதிக்கப்பட்டது. |
| 35 | 35 | 153 | அனுமதிக்கப்பட்டது. |
| 36 | 36 | 154 | பதிவு செய்யப்பட்டது. |
| 37 | 37 | 155 | அனுமதிக்கப்பட்டது. |
| 38 | 38 | 156 | அனுமதிக்கப்பட்டது. |
| 39 | 39 | 157 | அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 40 | 40 | 158 | அனுமதிக்கப்பட்டது. |
| 41 | 41 | 159 | அனுமதிக்கப்பட்டது. |
| 42 | 42 | 160 | அனுமதிக்கப்பட்டது. |
| 43 | 43 | 161 | அனுமதிக்கப்பட்டது. |
| 44 | 44 | 162 | அனுமதிக்கப்பட்டது. |
| 45 | 45 | 163 | அனுமதிக்கப்பட்டது. |
| 46 | 46 | 164 | அனுமதிக்கப்பட்டது. |
| 47 | 47 | 165 | அனுமதிக்கப்பட்டது. |
| 48 | 48 | 166 | அனுமதிக்கப்பட்டது. |
| 49 | 49 | 167 | அனுமதிக்கப்பட்டது. |
| 50 | 50 | 168 | அனுமதிக்கப்பட்டது. |
| 51 | 51 | 169 | அனுமதிக்கப்பட்டது. |
| 52 | 52 | 170 | அனுமதிக்கப்பட்டது. |
| 53 | 53 | 171 | அனுமதிக்கப்பட்டது. |
| 54 | 54 | 172 | அனுமதிக்கப்பட்டது. |
| 55 | 55 | 173 | அனுமதிக்கப்பட்டது. |
| 56 | 56 | 174 | அனுமதிக்கப்பட்டது. |
| 57 | 57 | 175 | அனுமதிக்கப்பட்டது. |
| 58 | 58 | 176 | அனுமதிக்கப்பட்டது. |
| 59 | 59 | 177 | அனுமதிக்கப்பட்டது. |
| 60 | 60 | 178 | அனுமதிக்கப்பட்டது. |
| 61 | 61 | 179 | அனுமதிக்கப்பட்டது. |
| 62 | 62 | 180 | அனுமதிக்கப்பட்டது. |
| 63 | 63 | 181 | அனுமதிக்கப்பட்டது. |
| 64 | 64 | 182 | அனுமதிக்கப்பட்டது. |
| 65 | 65 | 183 | அனுமதிக்கப்பட்டது. |
| 66 | 66 | 184 | அனுமதிக்கப்பட்டது. |
| 67 | 67 | 185 | அனுமதிக்கப்பட்டது. |
| 68 | 68 | 186 | அனுமதிக்கப்பட்டது. |
| 69 | 69 | 187 | அனுமதிக்கப்பட்டது. |
| 70 | 70 | 188 | அனுமதிக்கப்பட்டது. |
| 71 | 71 | 189 | அனுமதிக்கப்பட்டது. |
| 72 | 72 | 190 | அனுமதிக்கப்பட்டது. |
| 73 | 73 | 191 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/-P.சகுந்தலா,
நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல்/

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.